**விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் (22.09.2020) அன்று முற்பகல் 11.00 மணியளவில் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

**பே.மே. /17874/2020** **நாள்: 24.09.2020**

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் 2020ம் ஆண்டு வடகிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (22.09.2020) அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தில் பின்வருமாறு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

1. மாவட்ட காவல் கண்காணிப்பாளர், விழுப்புரம்.
2. சார் ஆட்சியர், திண்டிவனம்.
3. வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம்.
4. செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை(நீர்வள ஆதாரம்), விழுப்புரம்.
5. முதன்மை கல்வி அலுவலர், விழுப்புரம்.
6. இணை இயக்குநர்(நலப்பணிகள்), விழுப்புரம்.
7. மாவட்ட தீயணைப்புத்துறை அலுவலர், விழுப்புரம்.
8. உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), விழுப்புரம்.
9. மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர், விழுப்புரம்/ செஞ்சி/ திண்டிவனம்
10. உதவி பொறியாளர், பொதுப்பணித்துறை(க/ப), விழுப்புரம்.
11. உதவி பொறியாளர், BSNL தொலைத் தொடர்பு நிறுவனம், விழுப்புரம்.
12. உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம், விழுப்புரம்.
13. ஆய்வாளர்/ உதவி ஆய்வாளர், கடலோர பாதுகாப்பு காவல் படை, விழுப்புரம்.
14. தன்னார்வலர்கள், (இந்தியன் ரெட்கிராஸ்/அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்/ நேரு யுவ கேந்திரா/ செஞ்சிலுவைச் சங்கம்)
15. இதர துறை அலுவலர்கள்

2020 வடகிழக்கு பருவமழை காலம் தொடங்க இருக்கின்ற சூழலில் நாம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதன்படி வருவாய்த்துறை, காவல்துறை, வேளாண்மைத்துறை, மீன்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்சாரத்துறை, பொதுப்பணித்துறை (நீ.வ.ஆ), பொதுப்பணித்துறை (க/ப), தீயணைப்புத்துறை, சுகாதாரத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகம் உள்ளிட்ட துறைகள் ஒருங்கிணைந்து அவரவரவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளை துரிதமாக மேற்கொண்டு வரவிருக்கின்ற வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

__சுகாதாரத்துறை:-__

சுகாதாரத்துறை சார்பாக அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள் உள்ளிட்ட வளாகங்களில் தேவையற்ற இடர்பாடுகளுடன் கூடிய கட்டிடங்களை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், வடகிழக்கு பருவமழை காலத்தின்போது பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்திடும் வகையில் அவசர கால தேவைக்கேற்ப ஜெனரேட்டர் வசதி உள்ள தனியார் மருத்துவமனைகளை கண்டறிந்து மழை நீரால் பாதிப்பு ஏற்படாத வகையில் ஜெனரேட்டர் வசதிகளை முதல் தளத்தில் அமைக்க மருத்துவமனை நிர்வாகத்திடம் அறிவுறுத்த வேண்டும் எனவும், தனியார் மருத்துவமனையில் அவசர காலத் தேவைக்கேற்ப படுக்கை வசதி தேவையான அவசர கால உயிர்காக்கும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் இருப்பில் உள்ளதை சுகாதாரத்துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

சுகாதாரத்துறை சார்பாக இணை இயக்குநர் (நலப்பணிகள்) மாவட்டத்திலுள்ள அனைத்து தனியார் மருத்துவமனை நிர்வாகத்தினர் மற்றும் மருத்துவர்களை அழைத்து வரவிருக்கின்ற வடகிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறித்த ஆலோசனைக் கூட்டம் மேற்கொண்டு அந்தந்த மருத்துவமனை நிர்வாகம் அவசர காலத் தேவைக்கேற்ப மருத்துவமனைகளில் பாம்பு மற்றும் தேள் கடி போன்ற அவசர காலத் தேவைக்கான உயிர்காக்கும் மருந்துகள் உள்ளிட்டவற்றை தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

__கல்வித்துறை:-__

பள்ளிக்கல்வித்துறை சார்பாக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளுடைய தலைமையாசிரியர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடத்தி பள்ளி வளாகங்களில் தேவையற்ற இடர்பாடுகளுடன் கூடிய கட்டிடங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பயன்படுத்தாத வண்ணம் பூட்டி சீலிடப்பட வேண்டும் அல்லது அவற்றை அகற்றிடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், இடி, மழை மற்றும் மின்னல் போன்ற இயற்கைச் சீற்றம் ஏற்படும்போது அதிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக்கொள்வது என்பது குறித்த விளக்கமான வழிமுறைகளை ஒவ்வொரு தலைமையாசிரியரும் அவரவருடைய பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். பள்ளிவளாகங்களில் அமைக்கப்பட்டுள்ள மழை நீர் சேகரிப்பு தொட்டிகளை சுத்தப்படுத்திடவும், பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் டெங்கு ஒழிப்பு குறித்த விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அனைத்து பள்ளிகளுக்கும் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

எண்ணெய் நிறுவனங்கள்

1. எண்ணெய் நிறுவனங்கள் பேரிடர் காலங்களில் போதுமான அளவு டீசல் மற்றும் பெட்ரோல் ஆகியவற்றை இருப்பு வைத்துக் கொள்ள வேண்டும்.
2. பேரிடர் காலங்களில் எண்ணெய் வாகனங்கள் எளிதில் செல்லும் வகையில் காவல் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறையினை தொடர்பு கொண்டு மாற்றுவழி ஏற்பாடுகள் செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

தொலைதொடர்பு நிறுவனங்கள்

தொலைதொடர்பு நிறுவனங்கள் பேரிடர் மற்றும் கனமழைக் காலங்களில் கூடுதலாக நெட்வொர்க் அனைத்தும் தயார் நிலையில் வைத்துக் கொள்ளவும், மழைக்காலங்களில் எவ்வித பிரச்சினையுமின்றி பொதுமக்களுக்கு நெட்வொர்க் கிடைக்கும் வகையில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், செஞ்சிலுவைச் சங்கம், இந்தியன் ரெட்கிராஸ் சார்ந்து விவாதிக்கப்பட வேண்டியவை-

2020 வடகிழக்கு பருவமழையின் போது ஏற்படக்கூடிய புயல்/மழை/வெள்ளம் ஆகியவற்றின் தாக்கத்தினால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 09 வட்டங்களுக்கும் வட்டவாரியாக மண்டல அலுவலர்கள் (Zonal Officers) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி மண்டல அலுவலர்களின் குழு உறுப்பினர்கள் விழுப்புரம் மாவட்டம் முழுவதும் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளின் அடிப்படையில் 122 கிராமங்கள் Vulnerable கிராமங்களாக தேர்வு செய்யப்பட்டு, அப்பகுதிகளில் உள்ள ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், ஆறுகள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலை புறம்போக்குகளையும், தாழ்வான குடியிருப்பு பகுதிகள், நீர்நிலைகளை ஒட்டியுள்ள குடியிருப்புகள், கடற்கரை தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் போன்ற பாதிப்புக்குள்ளாக நேரிடும் பகுதிகள் அனைத்தையும் நேரடி ஆய்வு மேற்கொண்டு, எதிர்கொள்ளவிருக்கும் 2020ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழைக்கு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்து, பழுதடைந்த நிலையில் உள்ள நீர்நிலைகள், சாலைகள், சிறுபாலங்கள், தரைபாலங்கள், மதகுகள், கலங்கள், கரைகள் பலப்படுத்துதல் போன்றவற்றினை சீரமைத்தும், அவசர காலங்களில் தேவைப்படும் அனைத்து உபகரணங்கள், மருத்துவ ஏற்பாடுகள் அனைத்து தயார் நிலையில் வைத்திருக்க மண்டல அலுவலர்களுடன் நடத்தப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பு ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது, அதன்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேற்படி பருவமழை காலங்களில் ஏற்படும் வெள்ளம் பாதிப்பிலிருந்து மீட்பு பணிகளுக்காக மீட்புக்குழுக்கள் அமைக்கும்பொருட்டு, மாவட்டம் முழுவதும் உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாக மீட்பு பணியாளர்களின் (Volunteers) விவரப்பட்டியல் அளிக்கப்பட வேண்டும்.

மேற்படி மீட்புக் குழு பணியாளர்களின் பெயர், விலாசம், கைபேசி எண் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மைப் பிரிவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற்படி மீட்புக்குழு பணியாளர்களின் விவரங்கள் அனைத்தும், விழுப்புரம் மாவட்டத்தில் இயற்கை இடர்பாடுகள் கட்டுப்பாட்டு அலுவலக இணையதளத்தில் (Portal) பதிவேற்றம் துறைவாரியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இயற்கை இடர்பாடுகளிலிருந்து பாதுகாத்து, விடுவித்துக்கொள்ள ஏதுவாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் மீட்புக்குழுக்கள் மூலம் விழிப்புணர்வு கூட்டம் பொதுமக்களிடையே நடத்தப்பட்டு வருகிறது. புயல்/ வெள்ளம் எச்சரிக்கை விடுக்க சைரன் சவுண்டு மற்றும் ஒலிபெருக்கிகள் தயார் நிலையில் உள்ளது.

2020 வடகிழக்குப் பருவமழை காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீட்புக்குழுவினர்கள் (Volunteers) முழு ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும். கல்லூரி மாணவர்கள் N.S.S. மூலம் ஏற்பாடுகள் செய்து, அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

<u>பொது:-</u>

வருவாய்த்துறை, காவல்துறை, வேளாண்மைத்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்சாரத்துறை, பொதுப்பணித்துறை (நீ.வ.ஆ), பொதுப்பணித்துறை (க/ப), தீயணைப்புத்துறை, சுகாதாரத்துறை, பள்ளிக்கல்வித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகம் ஆகிய துறைகளின் அலுவலர்கள் தங்கள் துறை சார்ந்த அரசு கட்டடங்கள் மற்றும் கட்டட வளாகங்களில் உள்ள பயனற்ற கட்டங்கள் மற்றும் பட்டு போன மரங்களை கண்டறிந்து அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், கட்டடங்களில் மின் கம்பிகளின் கட்டமைப்புகள் மழைக் காலத்தின்போது எவ்வித அசம்பாவிதமும் ஏற்படாத வகையில் பாதுகாப்பான முறையில் உள்ளதா என்பதை நேரில் ஆய்வு மேற்கொண்டு சரிசெய்யவேண்டும். அந்தந்த துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பேரிடர் மீட்பு பணிகளில் தெளிவான வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றி செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு கூட்டம் இனிதே முடிக்கப்பட்டது.

ஒம்/- ஆ.அண்ணாதுரை,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விழுப்புரம்.

//உ.ந.உ.ப//

மாவட்ட ஆட்சியருக்காக.
24/9/2020

பெறுநர்

சம்பந்தப்பட்ட அலுவலர்கள்,

24/09/2020

நகல்:

முதன்மைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை.
- அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்:

மாவட்ட ஆட்சித்தலைவர் / கூடுதல் ஆட்சியர் (வருவாய்), விழுப்புரம் அவர்களின் நேர்முக எழுத்தர்.